

முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்படும் இராணிப்பேட்டை ஓட்டலில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தியுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர். உடன் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜெ.யு. சந்திரகலா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் பேருந்து மீது மின்அழுத்த கம்பி உரசிய விபத்தில்

# உயிரிழந்த அரசுப் பேருந்து ஓட்டுநர் பிரதாப்பின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 18-

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி, கோவில்மட்டம் என்ற இடத்தில் அரசுப் பேருந்தின்மீது உயர் மின்அழுத்த கம்பி உரசிய விபத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த அரசுப் பேருந்து ஓட்டுநரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கெங்கரை 1 கிராமத்தில் நேற்று முன்தினம் (16.08.2024) காலை சுமார் 06.10 மணியளவில் கூட்டாடாவிலிருந்து கோத்தகிரி நோக்கி நான்கு பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த அரசுப் பேருந்து கோவில்மட்டம் என்னும் இடத்தில் வந்துகொண்டிருந்த போது உயர் மின்அழுத்தக் கம்பி பேருந்தின்மீது உரசிய விபத்தில் நான்கு பயணிகள் மற்றும் நடத்துநர் பேருந்துப் படிக்கெட்டின் வழியாக கீழே இறங்கி தப்பித்த நிலையில் எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி அரசுப் பேருந்து ஓட்டுநர் பிரதாப் (வயது 42) த/பெ. தேவராஜ் என்பவர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில், உயிரிழந்த அரசுப் பேருந்து ஓட்டுநர் பிரதாப் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# மதுரை வடக்கு மாவட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, ஆக 18-

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்கி வருகிற 29.08.2024 அன்று மதுரை வடக்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் பிரம்மாண்டமாக நடைபெற உள்ளதாக வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்,

அவரது அறிக்கை வருமாறு:-

சென்னையில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.



ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பிரம்மாண்ட வெற்றி பெற்றதற்கு கழக தலைவருக்கு நன்றி தெரிவித்தல்,

கழகத்தின் பவள விழாவை வரவேற்கும் வகையில் கொண்டாடப்பட உள்ள முப்பெரும் விழாவினை சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த தீர்மானங்களை விளக்கும் வகையிலும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.வின் பொது உறுப்பினர்கள் குழு கூட்டம் கிழக்கு தொகுதிக்குட்பட்ட பொய்கைக் கரை பட்டியில் அமைந்துள்ள ஏ.கே.என்.கே பேலஸ் திருமண மஹாலில் வருகிற 29.08.2024 அன்று காலை 10.30 மணி அளவில் பிரமாண்ட மாக நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள், நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் என அனைவரும் தவறாது பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## விவசாயத்திற்குத் தேவையான புதிய திட்டங்களைச் செயல்படுத்திட

# வேளாண்மை பொறியியல் துறையின் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக 18-

வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் வேளாண்மைப் பொறியியல் துறையின் திட்டங்கள் குறித்து நேற்று முன்தினம் (16.08.2024) வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் மாவட்ட அதிகாரிகளுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கடந்த 08.01.2022-ல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கிட 'இ-வாடகை' ஆன்லைன் செயலி துவக்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் 2022-23-ஆம் ஆண்டில் 21,166 விவசாயிகள் பயனடைந்தனர். இதனைத் தொடர்ந்து 2023-24-ஆம் ஆண்டில் 30 சதவீதம் அதிகரித்து 9,797 விவசாயிகள் கூடுதலாக மொத்தம் 30,963 விவசாயிகள் பயனடைந்தனர். இதனால் அரசுக்கு ரூ.10.20 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் எட்டப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, கடந்த ஆண்டில் பெய்த பெருமழையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை பயன்படுத்தி 3330.40 ஏக்கர் பரப்பளவில் 2182 விவசாயிகள் பயனடையும் வகையில் மணல் திட்டுகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளையும் விரைவில் முடித்திட வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

டெல்டா மாவட்டங்களில் 'சி' மற்றும் 'டி' பிரிவு வாய்க்கால்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.20 கோடி செலவில், 4961 கிலோ மீட்டர் நீளத்திற்கு தூர்வாரப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மறுசீரமைப்பின்படி, வட்டார அளவில் உதவிப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) / இளநிலைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) பணியமர்த்தப்பட்டு, டிராக்டர்கள் வட்டார அலுவலகத்தில் நிறுத்தப்பட்டுள்ளதால், வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு எளிதில் கொண்டு சேர்த்து வாடகைக்கு வழங்கிட ஏதுவாக உள்ளது. இதனால் விவசாயிகள் உரிய நேரத்தில் வேளாண் பணிகளை இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ள முடிகிறது.

நீராதாரங்களை மேம்படுத்திடவும், கிராமங்களின் விவசாயிகள் பயன்பெறும் பொருட்டும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இதுவரை 1924 பண்ணைக் குட்டைகள் தனிப்பட்ட விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் அமைத்துத் தரப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான வேளாண் இயந்திரங்கள், கருவிகளை இயக்குதல், பராமரித்தல் தொடர்பான பயிற்சி முகாம்கள், மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற முகாம்கள் மற்றும் வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான திட்டத்தினை விரைந்து முடித்திட துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், கூட்டத்தின் முடிவில் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், விவசாயிகளின் தேவைகளை கருத்தில் கொண்டு விவசாயத்திற்குத் தேவையான புதிய திட்டங்களை கண்டறிந்து வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்திடவும், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான விவசாயிகளுக்கு சூரிய சக்தி பம்பு செட்டுகள் மானியத்தில் அமைக்கும் திட்டம், 100 சதவீத மானியத்தில் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், நீர்சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைத்தல் போன்றவற்றை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் வகையில் வெற்றிக் கதைகளை துண்டு பிரசுரங்கள், தொலைக்காட்சி மற்றும் செய்தி குறிப்பின் வாயிலாக பிரபலப்படுத்திடவும் அறிவுரை வழங்கினார்கள்.

இறுதியாக, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாங்கி அவற்றை விவசாயிகளிடையே பிரபலப்படுத்திட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

இந்நிகழ்வில் வேளாண்மைப் பொறியியல் துறையால் வடிவமைக்கப்பட்ட நெல் தானியத்தினை மூட்டையில் பிடிக்கும் கருவியின்செயல்விளக்கத்தினை வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் பார்வையிட்டு அதனை மேலும் மேம்படுத்திட அறிவுரைகள் வழங்கினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் இதர துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்டம் - கோத்தகிரி - கீழ்கோத்தகிரி ஒன்றியப் பகுதிகளில்

# ஆ.இராசா எம்.பி. நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சிகள்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!

நீலகிரி, ஆக. 18-

கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா நீலகிரி மாவட்டம் - கோத்தகிரி - கீழ் கோத்தகிரி ஒன்றிய பகுதிகளில் பொதுமக்கள் சந்திப்பு மற்றும் நன்றி தெரிவித்தல் நிகழ்ச்சி குறித்து மாவட்டக் கழக செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு வருமாறு:-

20.8.2024 - செவ்வாய்க் கிழமை

- காலை 11.00 மணி : அரவேனு
- காலை 11.30 மணி : மிளிதேன்
- பகல் 12.00 மணி : நெடுகுளா
- பகல் 12.30 மணி : கெரடாமட்டம்
- மதியம் 1.00 மணி : எஸ்.கைகாட்டி
- மதியம் 3.00 மணி : கீழ்கோத்தகிரி பஜார்
- மதியம் 3.30 மணி : சோலூர்மட்டம்
- மாலை 5.00 மணி : கோத்தகிரி பேருந்து நிலையம்
- மாலை 5.30 மணி : கட்டபெட்டு

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள், அனைத்து தரப்பு பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து சிறப்பிக்க வேண்டுவதோடு, தொடர்புடைய ஒன்றிய-பேரூர் கழக செயலாளர்கள் நிகழ்ச்சி களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்புடன் செய்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் தெரிவித்துள்ளார்.

# திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் - முரசொலிமாறன் 91வது பிறந்தநாள் விழா!

## சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி - டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை!

திருவண்ணாமலை, ஆக. 18-

திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திராவிட இயக்கதத்துவ பேராசானுமானமுரசொலிமாறன் அவர்களின் 91வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. அவரது திருவுருவப் படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். டாக்டர் எ.வ.வே.கம்பன் மற்றும் கழக முன்னோடிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

17.08.2024 சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் திராவிட இயக்க தத்துவ பேராசான் முரசொலிமாறன் அவர்களின் 91வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

முரசொலிமாறன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்.

கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் ப்ரியா விஜயரங்கன், மாநில தொமுச செயலாளர் க.சௌந்திரராசன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் மற்றும் கழக முன்னோடிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பிறந்தநாள் விழாவில் திருவண்ணாமலை ஒன்றிய செயலாளர் மெய்யூர் சந்திரன், மாநகரமேயர் நிர்மலாவேல் மாறன் மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், பாலமுரளி கிருஷ்ணா, டாக்டர் பிரவீன் ஸ்ரீதர், பி.கே.எ. அருண், கற்பகம் சரவணன், உ.நித்தியா, பேரூர் செயலாளர் சி.கே.அன்பு பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, மோட்டூர் பாலு, நகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாசலம், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்தி, இல.குணசேகரன், கோல்டு எஸ்.பிரபு, அக்கீம் சேட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கோ.இராஜசேகர், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, டி.எம்.கலை, எம்.ஆர். கலைமணி, இல. மின்னல் பாபு, கே.கந்தன், ஏ.எம். பாஷா, எஸ்.சமயராஜ், டி.பென்ராபர்ட், க.ரகுவர்மன், ஆர்.வெங்கடேஷ், சுனாபேகம், கஸ்தூரி, ஜெயமணி மூர்த்தி, பச்சையம்மாள்யேசு, காமாட்சி பாண்டியன் மற்றும் டி.எல்.எம். வினோத்குமார், சென்னைசுரேஷ், வி.என். அருண்பாபு, பா.முர்பத், ஆ.சுஜேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் கா.ராமச்சந்திரன் பங்கேற்பு!

# நீலகிரி மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

## பா.மு.முபாரக் அறிவிப்பு!

நீலகிரி, ஆக.18

நீலகிரி மாவட்ட தி.மு.கழக கூட்டம் 21.8.2024 புதன்கிழமை காலை 10.30 மணி அளவில் மாவட்ட கழக அவைத்தலைவர் கே.போஜன் தலைமையில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில் உதகை ஒக்கலிகர் திருமண மண்டப கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

கழக துணை பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா சிறப்புரையாற்றுகிறார்.



இதில் ஏற்கனவே 25.7.2024 நடைபெறுவதாக இருந்த மாவட்ட கழக கூட்டத்திற்கு அழைப்பு கிடைக்கப்பெற்ற மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், கழக மாவட்ட ஊராட்சி நகராட்சி - பேரூராட்சி - ஊராட்சி ஒன்றியம் - ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள் - உறுப்பினர்கள், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக சொற்பொழிவாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

பொருள்: 16.8.2024 சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்ட முடிவுகள் குறித்து.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி.

நீலகிரி மாவட்டத்தில் கழக முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்து.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு நீலகிரி மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவித்துள்ளார்.



திருப்பத்தூர் மேற்கு ஒன்றிய ஊராட்சிகளில் சி.என்.அண்ணாதுரை எம்.பி.வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகரம்,கஸ்பா 'பி' பகுதியில் நடைபெற்ற தேர் திருவிழாவில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் 60அடி உயர தேரை வடம்பிடித்து விழாவை துவக்கி வைத்தார்.உடன் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.சி.வில்வநாதன்,நகரச் செயலாளர் எம்.ஆர். ஆறுமுகம்,திருப்பத்தூர் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், ஊர் பொது மக்கள் ஆர். இளஞ்செழியன், பஞ்சாயத்து நிர்வாகிகள் ஐ. வசந்தநாத் (நகர இளைஞரணி துணை அமைப்பாளர் )ஏ. அதியமான்,குணா, வாஞ்சிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.